சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No.161/2023

2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திரு.அம்பேத்கார் த/பெ. | நாள்.08.08.2024 |
| வயது. | வட்டம் |
| கிராமம். | மாவட்டம். |

<u>வாதி சாட்சி 2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

1. நான் வழக்கில் 1ம் வாதி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான்.12.3.1947 தேதியில் கார்த்திகேயன் மற்றும் பலர் பிரித்துக் கொண்ட பாகப்பிரிவினை நகல் வா.த.சா–ஆ.1. கார்த்திகேயன் பாலசுப்பிரமணியத்திடம் இருந்து கிரயம் பெற்ற கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.2. 18.11.2005 தேதியில் சதாசிவம் மற்றும் பலர் ஜெயராமன் என்பவருக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா–ஆ. 3. 1.11.2005 தேதியில் ஜெயராமன், தனலட்சுமிக்கு எழுதிக் கொடுத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ. 4. 5.2.2016 தேதியில் தனலட்சுமி எனக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தின் சார்பதிவக நகல் வா.த.சா.ஆ–.5. 34/2006 வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை வா.த.சா.ஆ. 6 மற்றும் 7. வீட்டு வரி ரசீது வா.த.சா–ஆ. 8. கிராம நத்தம் அடங்கல் கணக்கு வா.த.சா.ஆ– 9. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை, தோன்றாத் தரப்பினர்